தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: திரு. மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப.(ஓ).,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 24 /ந/2021
நாள். 12.04.2022

திரு. K.G. பூபதி,
மூலக்கொத்தளம். சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருவள்ளூர் நகராட்சி. – எதிர்மனுதாரர்

சென்னை, மூலக்கொத்தளம், பெரிய பாளையத்தம்மன் கோயில் தெரு, 5வது தெரு, எண்.18/6, என்ற முகவரியில் வசிக்கும் திரு. K.G. பூபதி என்பவரின் 10.03.2021 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.03.2021 அன்று பெறப்பட்டு, 24/ந/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, மூலக்கொத்தளம், பெரிய பாளையத்தம்மன் கோயில் தெரு, 5வது தெரு, எண்.18/6, என்ற முகவரியில் வசிக்கும் திரு. K.G. பூபதி என்பவர் தமது மனுவில்:–

“திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 2010–ஆம் ஆண்டில் நிலுவையில் 79 பூங்காக்கள் இருந்தபோது நகராட்சி வசம் 11 பூங்காக்கள் மட்டுமே இருந்தது. மற்ற 68 பூங்காக்கள் அப்போதுள்ள மதிப்பீட்டின்படி சுமார் 220 கோடி சொத்து அத்தனையும் பொதுமக்கள், மனைபிரிவு உரிமையாளர்கள் மற்றும் நகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு கட்டிடமாகவும் ஆக்கிரமிப்பில் இருந்தது.

இந்த ஆக்கிரமிப்பு ஒரே ஒரு நகரமைப்பு ஆய்வர் திரு. குமரவேல் தலைமையில் 7 ஆணையர்கள் உதவியுடன் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடங்களை தன் உயிரை பணையம் வைத்து திரு. பி. லட்சுமி நாராயணன் அவர்கள் தலைமையில் 6 ஆணையர்கள் மாறுதல் ஆகியும் 2011 முதல் 2017 வரை 68 பூங்கா இடம் சுமார் 220 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை ஆய்வு செய்து சர்வே எண்கள் சேகரித்து, பரப்பளவுகள் சேகரித்து தினசரி நாளிதழ், தினத்தந்தி மற்றும் தினகரன் பத்திரிக்கையில் 79 பூங்கா சர்வே எண்கள் அனைத்தும், அனைத்து இடங்களும் நகராட்சிக்கு சொந்தமான பொது

ஒதுக்கீடு எனவும், இவ்விடத்தில் கொடுக்கப்பட்ட தவறான பட்டா, கட்டிட அனுமதி, வரிவிதிப்பு, மின்இணைப்பு ரத்து செய்ய வேண்டும் எனவும், நகராட்சி கட்டணம் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

மேலும் 68 பூங்கா இடத்தையும் பல எதிர்ப்புகள் மீறி நகர சர்வேயர் மூலம் அளவீடு செய்து பெயர் பலகை வைத்து முள்வேலி அமைத்து பொதுமக்களின் பார்வைக்கு தெரிவிக்கப்பட்டது. இந்த 68 பூங்காக்களில் 3 பூங்காக்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட ஆக்கிரமிப்புதாரர்கள் மற்றும் அனைத்து உரிமையாளர்கள் சேர்ந்து நாங்கள் படிப்பறிவில்லாத காரணத்தாலும் மேலும் நகரமைப்பு ஆய்வர் திரு. குமரவேல் எங்களுக்கு தவறுதலான வழிகாட்டுதலாலும் தவறு செய்துவிட்டோம் என்று எழுதி கொடுத்து பெரும்பாக்கம் திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதி மாற்று இடமாக 1.75 ஏக்கர் 2011–ம் ஆண்டில் சுமார் இதன் மதிப்பு 20 கோடி ரூபாய் மதிப்பீட்டு இடத்தை தானமாக தானே முன்வந்து ரூ.100/–க்கான பத்திரத்தில் அவர்களாக பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளார்கள். அதையும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட மனைபிரிவு பகுதியில் இல்லாமல் நகராட்சி எல்லைக்குள் கொடுத்துள்ளார்கள்.

இவ்விடத்தை நகராட்சி அலுவலகம் ஏற்கலாமா, வேண்டாமா என்று நகராட்சி நிர்வாகம் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை வழியாக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் மேற்படி 3 இடத்தின் பிரச்சனைகள் முடியும் வரை தானமாக கொடுக்கப்பட்ட இடத்தை பத்திரப்பதிவு எப்போதும் ரத்து செய்யக்கூடாது எனவும் சார்பதிவாளர், திருவள்ளூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு தானமாக கொடுக்கப்பட்ட இடத்திலும் நகராட்சி பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாக்கிரமிப்பு தொடர்பான விவரங்கள் அனைத்தும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதின் தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திரு. தண்டபாணி அவர்கள் தலைமையில் ஆணையாளர் திரு.சரவணக்குமார், நகரமைப்பு அலுவலர் திரு. சிவக்குமார், நகரமைப்பு ஆய்வர்கள் திரு. எம். வெங்கடேசன், திரு. என். தினகரன், திரு.வி. காமதுரை, திரு. பி.லட்சுமி நாராயணன் இவர்களை குழுவாக அமைத்து மேற்படி தவறுகள் யாரால் நடந்தது என்பதை ஆறு மாத காலமாக ஆய்வு செய்யப்பட்டு 68 பூங்கா ஒதுக்கீடுகள் சுமார் 220 கோடி சொத்து மதிப்புள்ள இடத்தை திரு. குமரவேல் நகரமைப்பு ஆய்வர் மற்றும் 7 ஆணையர்கள் கால கட்டத்தில் இத்தவறுகள் செய்யப்பட்டது என உறுதி செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திரு. தண்டபாணி அவர்கள் நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை அவர்களுக்கு இக்குற்றச்சாட்டுகளை புத்தகமாக ஆதாரத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. இதுநாள்வரை மேற்படி தவறுகள் செய்த திரு. குமரவேல் நகரமைப்பு ஆய்வர் அவர்கள் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

ஆனால் தமிழ்நாட்டிலே எந்த நகரமைப்பு ஆய்வரும் துணிந்து செய்யாத வேலையை செய்த திரு. பி. லட்சுமி நாராயணன் அவர்கள் திரும்பவும் திருவள்ளூர் நகராட்சிக்கு வரக்கூடாது என்ற எண்ணத்துடன் உறுதி செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு கட்டிடதாரர்கள் ஒன்று கூடி பணம் திரட்டி பல தீய எண்ணமுள்ள நபர்கள் வழியாக தவறான பிரச்சனைகள் எழுப்பி வருகிறார்கள். மேலும் இவ்வாக்கிரமிப்பு திருவள்ளூர் டவுன் அகரம் தெருவில் மிகப்பெரிய பள்ளி ஒன்று பூங்கா இடத்தில் தான் உள்ளது எனவும் அதற்கு ஆதாரமாக 1951 முதல் உள்ள அத்தனை ஆவணங்களை எடுக்கப்பட்டு மேலும் இக்கட்டிடத்திற்கு திரு.குமரவேல் நகரமைப்பு ஆய்வர் அனுமதி கொடுக்கப்பட்டதையும் மற்றும் தவறாக இவ்விடத்திற்கு வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் வட்டாட்சியர், திருவள்ளூர் அவர்கள் பட்டா கொடுக்கப்பட்டதை ரத்து செய்யக்கோரி மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு புகார் கொடுக்கப்பட்டு மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட நீதித்துறை முதன்மை நடுவர், திருவள்ளூர் அவர்களிடம் மேற்படி பள்ளி கட்டிடத்திற்கு வழக்கு தொடரப்பட்டு வழக்கு நடைபெற்று வந்தது.

அப்போது திரு. லட்சுமிநாராயணன், நகரமைப்பு ஆய்வர் அவர்களின் தந்தையார் உடல்நிலை காரணமாக உயிருக்கு போராடி மருத்துவமனையில், இருந்த போது நாள் 17.08.2012 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு இவ்வழக்கு மேற்படி DRO அலுவலகத்தில் நடைபெறுவதாகவும் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட பள்ளி உரிமையாளர்கள் இதுவரை நான் நேரில் கண்டதில்லை என்றும் திரு. லட்சுமிநாராயணன், நகரமைப்பு ஆய்வரை அப்போதுள்ள ஆணையாளர் இவ்வழக்கில் நேரில் ஆஜராக வேண்டுமென கேட்டார். தனது தந்தையார் உயிருக்கு போராடிய நிலையில் இருந்த போதும் DRO அலுவலகம், திருவள்ளூருக்கு நேரில் சென்று இவ்விடம் எங்கள் திருவள்ளூர் நகராட்சிக்கு சொந்தமானது என்று 1951–ம் ஆண்டு வரை உள்ள அத்தனை ஆவணங்களையும் கொடுத்து நகராட்சிக்கு சொந்தமான இடம் என நிரூபிக்கப்பட்டு மறுநாள் காலையும் இப்பணிக்கு வந்து மேற்படி விவரங்களை ஆணையரிடம் சமர்ப்பித்தார். மருத்துவமனையில் அனுமதித்திருந்த தனது தந்தையார் 18.08.2012 அன்று சனிக்கிழமை உயிர் பிரிந்த நிலையிலும் நேரில் பார்க்க இயலாத நிலையில் தள்ளப்பட்டு மேற்படி இடமான 68 இடம் சுமார் 220 கோடி ரூபாய் மதிப்புள்ள இடத்தை மீட்ட நகரமைப்பு ஆய்வர் மீது பாராட்டவில்லை என்றாலும் துன்புறுத்த வேண்டாம்.

நகரமைப்பு ஆய்வர் திரு. லட்சுமி நாராயணன் அவர்கள் 2017ம் வருடத்திற்கு பிறகு வந்த நகரமைப்பு ஆய்வர்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களை அகற்றுவதற்காக நடவடிக்கை ஏதேனும் எடுத்தார்களா, இல்லை வெறும் கட்டிட அனுமதி வேலைகள் மட்டும் செய்தார்களா ? இனிவரும் காலங்களிலாவது மேற்படி ஆக்கிரமிப்பு உடந்தையாக இருந்த திரு.குமரவேல் நகரமைப்பு ஆய்வர், ஆணையாளர் மற்றும் வரிவிதிப்பு செய்த வருவாய் அலுவலர்கள் இவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ? என திருவள்ளூர் நகராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தாம்பரம் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் தடுப்புகளையும் மீறி சேகரிக்கப்பட்ட கோப்புகளையும் மற்றும் பொது ஒதுக்கீடுகளையும் பாதுகாக்கவும்

இதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் அளிக்க தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

2) இப்புகார் மனு தொடர்பாக 31.3.2021 மற்றும் 10.8.2021 நாளிட்ட புகார் மனு வாயிலாக திருவள்ளூர் நகராட்சி ஆணையாளரிடம் அறிக்கை கோரப்பட்டது திருவள்ளூர் நகராட்சி ஆணையாளர் தமது 30.8.2021 நாளிட்ட அறிக்கையில்:–

''திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குள் நகர் ஊரமைப்பு துறையினரால் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளில் பொது உபயோகத்திற்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களான பூங்கா, சிறுவர் விளையாடுமிடம் மற்றும் திறவிடங்களை தனி நபர்களுக்கு பத்திரம் பதிவுச் செய்யக்கூடாது எனவும், அந்த இடங்களுக்கு "0" (Zero) மதிப்பு நிர்ணயம் செய்யக் கோரியும், சார்பதிவாளர் திருவள்ளூர் அவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட இடங்களின் பட்டியல் இணைத்து பட்டியலில் தெரிவித்துள்ள பூங்காக்கள் மற்றும் பொது உபயோக இடங்களில் தனி நபருக்கு பத்திரம் பதிவு செய்யப்பட்டு இருப்பின், அந்த பதிவுகளை ரத்துச் செய்யகோரியும், கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், இந்நகராட்சி எல்லைக்குள் அமையும் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடங்களை தனி நபருக்கு பட்டா செய்யக்கூடாது எனவும், அப்படி பட்டா ஏதும் வழங்கப்பட்டு இருப்பின் அந்த பட்டாக்களை ரத்து செய்யவும் கேட்டு வட்டாட்சியர், திருவள்ளூர் அவர்களுக்கு, நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களின் பட்டியலுடன் இணைத்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், நகராட்சிக்கு சொந்தமான பொது உபயோக இடங்களுக்கு சுற்று வேலி அமைத்து நகராட்சிக்கு சொந்தமான இடம் என விளம்பர பலகை வைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருவள்ளூர் நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 21.02.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. 21.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

''திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பூங்காக்களுக்காக ஒதுக்கப்பட்ட 78 இடங்களில், 10 இடங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை. ஆனால், பூங்காக்களுக்காக ஒதுக்கப்பட்ட மற்ற 68 இடங்களில் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் கடந்த 3–4 வருடங்களாக நடைபெற்று வருகின்றன. ஒரு சில இடங்களில், நகராட்சியால் வேலி போடப்பட்டும், அதனை உடைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். மேற்கண்ட ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களில் வீடுகள் கட்டுவதற்கான ஒப்புதல் பெற்று பலர் வீடுகளை கட்டியுள்ளனர். ஒரு சிலர் கடைகளையும் கட்டியுள்ளனர்.

எனவே, மேற்கண்ட பொது ஒதுக்கீடாக, பூங்காக்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அத்தகைய ஆக்கிரமிப்பு இடங்களை மீட்டு நகராட்சியில் சேர்க்கவும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகள் நடைபெற காரணமான நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

4) திருவள்ளூர் நகராட்சி ஆணையாளர் உள்ளாட்சி தேர்தல் பணி நிமித்தமாக தமக்கு மாற்று தேதி கோரியதன் அடிப்படையில் 14.03.2022 அன்றைய தேதியில் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையாளருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 14.03.2022 அன்றைய நேரடி விசாரணையிலும் ஆஜராகாததால் மீண்டும் ஒரு வாய்ப்பு அளித்து 28.03.2022 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். 28.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருவள்ளூர் நகராட்சி மேலாளர் மற்றும் நகராட்சி ஆணையர் (பொ) மற்றும் பணி மேற்பார்வையாளர் ஆகியோர் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

''திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பூபதி என்பவர் திருவள்ளூர் நகராட்சியில் பூங்காக்கள் ஆக்கிரமிப்பு தொடர்பாக அளித்துள்ள மனு தொடர்பாக எங்களது 25.03.2022 நாளிட்ட கடிதத்தையே எங்களது வாக்குமூலமாக இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் திருவள்ளூர் நகராட்சியில் பூங்காக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் வேலி அமைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் வேலி அமைத்ததற்கான புகைப்படங்களை இன்னும் ஓரிரு நாட்களில் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம் எனவும் தெரிவித்துக்கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளார்.

5) திருவள்ளூர் நகராட்சி ஆணையர் (பொ) அவர்கள் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு அவரது 25.03.2022 நாளிட்ட அறிக்கையில் :–

மனுதாரர் திருவள்ளூர் நகராட்சி பகுதியில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் 78. அதில் 10 இடங்களில் ஆக்கிரமிப்பு இல்லை மற்ற 68 இடங்களில் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பல இடங்களில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன என தெரிவித்துள்ளார்.

''மனுதாரர் தமது மனுவில் திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பெரியகுப்பம் கிராமம் நில அளவு எண்.644, 645, 646/2–ல் உள்ள வி.எம்.நகர் பகுதிக்கு நகர் ஊரமைப்பு துறையால் ம.வ./ந.ச.இ.எண்.239/89 என்ற எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பெரியகுப்பம் கிராமம் நில அளவு எண்.106, 107, 108, 109, 110, 111, 112, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 126, 130, 131 மற்றும் 85 பகுதியில் உள்ள அய்யனார் அவென்யூ பகுதிக்கு நகர் ஊரமைப்பு துறையால் ம.வ./ந.ச.இ.எண்.1249/91 என்ற எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவுகள் திரு. எம். வன்னியராஜ், த/பெ. முத்தைய்யா நாடார், எண்.4, கம்பர் தெரு, திருவள்ளூர் என்பவருக்கு சொந்தமானது.

மேற்படி மனைப்பிரிவுகளில் வி.எம்.நகரில் 9380 ச.அடிகள் மற்றும் அய்யனார் அவென்யூ பகுதியில் 5400 ச.அடிகள் ஆக இரண்டு மனைப்பிரிவுகளிலும் சேர்த்து மொத்தம் 14780 ச.அடிகள் கொண்ட இடத்தினை மனைப்பிரிவின் உரிமையாளர் திரு. வன்னியராஜ் அவர்கள் பொதுமக்களுக்கு விற்றுவிட்டார்.

மேற்படி குடியிருப்பு கட்டிடங்கள் கட்டிய உரிமையாளர்கள் வசம் நகராட்சி அலுவலர்கள் அவர்களிடம் உள்ள ஆவணங்களை பரிசீலிக்கும் பொருட்டு கடந்த 16.06.2011 அன்று சம்மன் அனுப்பியதற்கு, மேற்படி கட்டிடம் கட்டிக்கொண்டுள்ளவர்கள் கடந்த 20.06.2011ம் தேதியன்று மேற்படி இடம், பூங்கா இடம் என்பதனை மறைத்து திரு. வன்னியராஜ் அவர்கள் மேற்படி இடங்களை எங்களுக்கு விற்றுவிட்டதாகவும், மேலும் நாங்கள் 20 ஆண்டுகளுக்கு முன் அங்கு வீடுகள் கட்டி வசித்து வருவதாகவும், மேற்படி இடம் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடம் என எங்களுக்கு எதுவும் தெரியாது என தெரிவித்துக்கொள்வதுடன் மேற்படி எங்கள் வீடுகளை நகராட்சியால் இடித்துவிட எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என கடிதம் அளித்துள்ளார்கள் என்றும், இந்நிலையில் மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூங்கா இடத்தினை விற்பனை செய்த திரு. வன்னியராஜ் என்பவர், மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூங்கா இடத்தினை தவறுதலாக விற்றுவிட்டதாகவும், அதற்கு பதிலாக திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட புங்கத்தூர் கிராமம் நில அளவை எண்.560/2,3,4–ல் உள்ள 1.58 ஏக்கர் இடத்தினை நகராட்சி ஆணையர் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் தயார் செய்து, பதிவு செய்யப்படாத பத்திரங்களுடன் இந்நகராட்சிக்கு விண்ணப்பம் செய்து, இப்பிரச்சனை தொடர்பாக அரசு எடுக்கும் எவ்வித முடிவிற்கும் நான் கட்டுப்படுகிறேன் என விண்ணப்பம் அளித்துள்ளார்.

மேற்படி திரு. வன்னியராஜ் அவர்கள் அளித்துள்ள விண்ணப்பத்தின் பேரில், மேற்படி பூங்கா இடத்திற்கு மாற்று இடம் அளிப்பது குறித்து கருத்துருவினை கோரி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு திருவள்ளூர் நகராட்சியின் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து இதுநாள் வரைக்கும் எவ்வித பதிலும் பெறப்படாத நிலையில் உள்ளது.

மேலும் மேற்படி மனைப்பிரிவில் குடியிருப்பு கட்டிடம் கட்டியுள்ளவர்கள் எங்களுடைய வீடுகளை இடிக்க வேண்டாம் எனவும், மேற்படி இடத்திற்கு ஈடாக மனைப்பிரிவு உரிமையாளரால் வேறு இடம் தர தயாராக உள்ளதாகவும் தெரிவித்து, மேற்படி பூங்கா இடத்திற்கு பதிலாக மனைப்பிரிவு உரிமையாளர் அளிக்கும் இடத்தினை ஏற்றுக்கொண்டு நாங்கள் வீடுகள் கட்டியுள்ள இடத்தினை எங்களுக்கு அளிக்குமாறு கோரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அகரத் தெரு, சர்வே எண்.244/2–ல் அமைந்துள்ள தர்மமூர்த்தி ராவ் பகதூர் பள்ளி நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தில் கட்டப்பட்டுள்ளது என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திருவள்ளூர் நகரம், பழைய புல எண்.244/2 புதிய நகர அளவை எண்.27–ல் உள்ள நிலம் ராஜாம்பாள் பூங்கா என்ற பெயரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடத்தினை தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவல குன்னன் செட்டி பெயரில் பட்டா மாறுதல் செய்ததை ரத்து செய்து மீண்டும் திருவள்ளூர் நகராட்சியின் பெயரில் பட்டா மாறுதல் செய்துத் தர உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களை திருவள்ளூர் நகராட்சி ஆணையர் மூலம் கோரப்பட்டுள்ளது.

மேற்படி திருவள்ளூர் நகராட்சி ஆணையர் அவர்களின் கோரிக்கையின்படி, மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.675/2012/ஆ3, நாள்:26.09.2021–ன்படி, தொடர்புடைய ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில், அரசாணை எண்.761, உள்ளாட்சி நிர்வாகம், நாள் 28.03.1964–ல் பிரஸ்தாப புலத்தை நகராட்சி நிர்வாகம் தஞ்சாவூர் ராம நாயக்கன் நம்பகத்திடமிருந்து நீண்ட கால குத்தகைக்கு எடுத்துள்ளதாகவும், அதில் தற்போது நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியினர் விளையாட்டுத் திடலாக பயன்படுத்திக்கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் உரிமையியல் நீதிமன்ற முதலேற்பு வழக்கு எண்.498/1980–ல் 28.08.1982–ம் தேதிய தீர்ப்புரையில், தாவா சொத்து ஆதியில் அதாவது 1822–ல் மாம்பல ரங்கைய நாயுடு டிரஸ்ட்டுக்கு சொந்தமானது எனவும், இந்த நிலத்தில் உள்ள நகராட்சியின் பள்ளி கட்டிடத்திற்கு மாதம் ரூ.40/– வாடகை எனவும், காலி இடத்திற்கு மாதம் ரூ.5/– என்ற அடிப்படையில் நியமித்திருந்தது. அரசாணை எண்.2000, உள்துறை, நாள் 16.08.1976–ன் கீழ் தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு சட்டம் 1960) லிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டதென்றும், தாவா கட்டிடத்திற்கும், காலி மனைக்கும் நகராட்சி நிர்வாகத்தினர் 1976 டிசம்பர் மாதத்திலிருந்து 1979 டிசம்பர் மாதம் வரை வாடகை கொடுக்கப்படாமல் இருந்துள்ளது. மேற்படி இடத்திற்குண்டான வாடகை தொகையினை நகராட்சி நிர்வாகம் செலுத்தாத காரணத்தினால் 19.11.1979ஆம் தேதியன்று தொடர்புடைய இடத்தின் உரிமையாளரால் வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அந்த நோட்டீஸில் மேற்படி கட்டிடம் மற்றும் காலி நிலத்தை 31.12.1979 அன்று நகராட்சி நிர்வாகத்தினரால் காலி செய்து தரவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. பின்னர் இப்பொருள் குறித்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும்போது நகராட்சி நிர்வாகத்தினரால் அதற்கான ஆவணங்களையோ மற்றும் நோட்டீஸ்களையோ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என தெரியவருகிறது.

மேற்படி வழக்கின் தீர்ப்புரையில், நகராட்சியினர் தாவா சொத்தில் பள்ளிக்கூடம் நடத்தி வருபவரால் நகராட்சி நிர்வாகம் அந்த பள்ளிக் கட்டிடத்தை 31.05.1983–க்குள் காலி செய்து தரவேண்டும் என முடிவு செய்யப்பட்டு, தீர்ப்புரை வழங்கப்பட்ட நாளான 28.08.1982–லிருந்து 31.5.1983 அதாவது சுமார் எட்டு மாதங்களுக்கு கால அவகாசம் அளிக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மேற்படி தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து மேற்படி வழக்கு நான்கு ஆண்டுகள் காலம் கடந்து அளிக்கப்பட்ட தீர்ப்பின்படி தொடர்புடைய இடத்திற்கு நகராட்சி நிர்வாகத்தினர் எவ்வித உரிமையும் இல்லாதவர் என்றும், கட்டிடத்தினை காலி செய்து தர தீர்ப்புரை வழங்கப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் காலி செய்து தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பின்னர் தொடர்புடைய இடத்திற்கு உரிமையாளர்களால், சென்னை உயர்நீதிமன்றத்தில் சிவில் வழக்கு எண்.224/1995–ல் வழக்கு தொடரப்பட்டு, மனு எண்.2045 மூலம் தொடர்புடைய நிலங்களை விற்க அனுமதி பெற்று அதற்குண்டான டெண்டரை நீதிபதி முன் திறந்து அதில் அதிக தொகை தருவதாகக் கூறிய தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவல குன்னன் செட்டி நம்பகத்திற்கு பத்திர எண்.817/2000, நாள் 23.02.2000–த்தின்படி ரூ.11,12,454/–க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பின்னர் தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவல குன்னன் செட்டி அறக்கட்டளையினர், தொடர்புடைய நிலம் மேற்படி பத்திர எண்.817/2000, நாள் 23.02.2000–த்தின்படி தஞ்சாவூர், மாம்பலம் ராமநாயக்கர் அறக்கட்டளையிலிருந்து கிரையம் பெற்று, தர்மமூர்த்தி ராம் பகதூர் கலவல குன்னன் செட்டி அறக்கட்டளையினர் வசம் அனுபோகத்தில் இருந்து வருவதாகவும், பத்திர பதிவுகளின்படி மேற்படி இடம் தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவல குன்னன் செட்டி அறக்கட்டளையினரை சேர்ந்ததாலும், தொடர்புடைய இடத்தின் பட்டாவை தஞ்சாவூர், மாம்பலம் ராமநாயக்கர் அறக்கட்டளையிலிருந்து மாற்றி தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவல குன்னன் செட்டி அறக்கட்டளையின் பெயரில் பட்டா மாற்றம் செய்து ப.மு.1052/2004/அ5, நாள்:24.06.2004–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1964–ஆம் ஆண்டின் அரசாணை 761, உள்ளாட்சித் துறை, நாள் 28.03.1964–ன்படி தொடர்புடைய இடத்தினை நகராட்சி நிர்வாகம் தஞ்சாவூர், மாம்பலம் ராமநாயக்கர் அறக்கட்டளையிடமிருந்து நீண்டகால குத்தகைக்கு எடுத்துள்ளதாகவும், அதில் தற்போது நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியினர் விளையாட்டுத் திடலாக உபயோகப்படுத்திக் கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், அந்த இடத்தில் நகராட்சி நிர்வாகத்தினரால் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மாதத்திற்கு ரூ.40/– வாடகையாகவும், காலியாக உள்ள இடத்திற்கு ரூ.5/– வாடகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் “நீதிமன்ற தீர்ப்புரைகளின் அடிப்படையில் தொடர்புடைய இடத்தின் உரிமை ஆரம்ப கட்டம் முதல் நகராட்சி நிர்வாகத்திடம் இல்லை என்பதாலும், நகரளவை திட்டத்தின் போது தவறுதலாக கிராம கணக்குகளில் மேற்படி இடத்தினை நகராட்சி ராஜம்பாள் பூங்கா என பதிவு செய்யப்பட்டுள்ளதை திருத்தி தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவல குன்னன் செட்டி அறக்கட்டளையின் பெயரில் பட்டா மாற்றம் செய்து ப.மு.1052/2004/அ5, நாள் 24.06.2004–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே தொடர்புடைய இடம் தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவல குன்னன் செட்டி அறக்கட்டளைக்கு சொந்தமான இடம் என்பது மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி தெரியவருகிறது என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு, திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பெரியகுப்பம் கிராமம் நில அளவு எண்.644, 645, 646/2 –ல் உள்ள வி.எம்.நகர் பகுதிக்கு நகர் ஊரமைப்பு துறையால் ம.வ./ந.ச.இ.எண்.239/89 என்ற எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிலும், மேலும் பெரியகுப்பம் கிராமம் நில அளவு எண்.106, 107, 108, 109, 110, 111, 112, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 126, 130, 131 மற்றும் 85 பகுதியிலுள்ள அய்யனார் அவென்யூ பகுதிக்கு நகர் ஊரமைப்பு துறையால் ம.வ./ந.ச.இ.எண்.1249/91 என்ற எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிலும் உள்ள நகராட்சி பூங்கா இடத்தில் தவறுதலாக கட்டிட அனுமதி அளித்த, நகரமைப்பு ஆய்வர் திரு.குமரவேல் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்'' என்று தெரிவித்துள்ளார்.

6) இந்நேர்வில் மனுதாரரின் மனு அவரது வாக்குமூலம் திருவள்ளூர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம், வாக்குமூலத்தின் போது சமர்பித்த அறிக்கை ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

''மனுதாரர் திருவள்ளூர் நகராட்சி பகுதியில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் 78. அதில் 10 இடங்களில் ஆக்கிரப்பு இல்லை மற்ற 68 இடங்கள் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பல இடங்களில் வீடுகள் கட்டப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பெரியகுப்பம் கிராமம் நில அளவு எண்.644, 645, 646/2 இல் உள்ள வி.எம்.நகர் பகுதிக்கு நகர் ஊரமைப்பு துறையால் ம.வ./ந.ச.இ. எண்.239/89 என்ற எண்ணிடப்பட்டு மனைப் பிரிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பெரியகுப்பம் கிராமம் நில அளவு எண்.106, 107, 108, 109, 110, 111, 112, 118, 119, 120, 121, 122, 123, 124, 125, 126, 130, 131 மற்றும் 85 பகுதியில் உள்ள அய்யனார் அவென்யூ பகுதிக்கு நகர் ஊரமைப்பு துறையால் ம.வ./ந.ச.இ.எண்.1249/91 என்ற எண்ணிடப்பட்டு மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவுகள் திரு. எம். வன்னியராஜ், த/பெ. முத்தைய்யா நாடார், எண்.4, கம்பர் தெரு, திருவள்ளூர் என்பவருக்கு சொந்தமானது.

மேற்படி மனைப்பிரிவுகளில் வி.எம்.நகரில் 9380 ச.அடிகள் மற்றும் அய்யனார் அவென்யூ பகுதியில் 5400 ச.அடிகள் ஆக இரண்டு மனைப்பிரிவுகளிலும் சேர்த்து மொத்தம் 14780 ச.அடிகள் கொண்ட இடத்தினை மனைப்பிரிவின் உரிமையாளர் திரு. வன்னியராஜ் அவர்கள் பொதுமக்களுக்கு விற்றுவிட்டார்.

மேற்படி குடியிருப்பு கட்டிடங்கள் கட்டிய உரிமையாளர்கள் வசம் நகராட்சி அலுவலர்கள் அவர்களிடம் உள்ள ஆவணங்களை பரிசீலிக்கும் பொருட்டு கடந்த 16.06.2011 அன்று சம்மன் அனுப்பியதற்கு, மேற்படி கட்டிடம் கட்டிக்கொண்டுள்ளவர்கள்

கடந்த 20.06.2011 ஆம் தேதியன்று மேற்படி இடம் பூங்கா இடம் என்பதனை மறைத்து திரு. வன்னியராஜ், அவர்கள் மேற்படி இடங்களை தங்களுக்கு விற்றுவிட்டதாகவும், மேலும் தாங்கள் 20 ஆண்டுகளுக்கு முன் அங்கு வீடுகள் கட்டி வசித்து வருவதாகவும், மேற்படி இடம் நகராட்சிக்கு சொந்தமான பூங்கா இடம் என தங்களுக்கு எதுவும் தெரியாது என தெரிவித்துக்கொள்வதுடன் மேற்படி தங்கள் வீடுகளை நகராட்சியால் இடித்துவிட எவ்வித நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என கடிதம் அளித்துள்ளார்கள் என்றும், இந்நிலையில் மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூங்கா இடத்தினை விற்பனை செய்த திரு. வன்னியராஜ் என்பவர், மேற்படி மனைப்பிரிவில் உள்ள பூங்கா இடத்தினை தவறுதலாக விற்றுவிட்டதாகவும், அதற்கு பதிலாக திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட புங்கத்தூர் கிராமம் நில அளவை எண்.560/2,3,4–ல் உள்ள 1.58 ஏக்கர் இடத்தினை நகராட்சி ஆணையர் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் தயார் செய்து, பதிவு செய்யப்படாத பத்திரங்களுடன் இந்நகராட்சிக்கு விண்ணப்பம் செய்து, இப்பிரச்சனை தொடர்பாக அரசு எடுக்கும் எவ்வித முடிவிற்கும் நான் கட்டுப்படுகிறேன் என விண்ணப்பம் அளித்துள்ளார் என்றும்,

மேற்படி திரு. வன்னியராஜ் அவர்கள் அளித்துள்ள விண்ணப்பத்தின் பேரில், மேற்படி பூங்கா இடத்திற்கு மாற்று இடம் அளிப்பது குறித்து கருத்துருவினை கோரி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களுக்கு திருவள்ளூர் நகராட்சியின் மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து இதுநாள் வரைக்கும் எவ்வித பதிலும் பெறப்படாத நிலையில் உள்ளது.” என்று தெரிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. மேற்படி இடம் பூங்கா இடம் என்பதை மறைத்து 2011–ஆம் ஆண்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா இடத்தினை விற்பனை செய்த திரு. வன்னியராஜ் அவர்கள் பூங்கா இடத்தினை தவறுதலாக விற்றுவிட்டதாக தெரிவித்து அதற்கு மாற்று இடம் தருவதாக தெரிவித்ததை ஏற்று அது பற்றிய கருத்துக்களை கோரி நகர ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு இது நாள் வரையில் எவ்வித பதிலும் பெறப்படவில்லை என்று 11 ஆண்டுகள் கழித்து ஆணையாளர் தெரிவித்திருப்பதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. சுமார் 11 ஆண்டுகளாக இதில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தை விற்பனை செய்த திரு. வன்னியராஜ் மீது எவ்வித குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

7) மேலும் திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அகரத் தெரு சர்வே எண்.244/2ல் அமைந்துள்ள தர்மமூர்த்தி ராவ் பகதூர் பள்ளி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ளது என்ற புகாருக்கு ஆணையாளர்,

“நீதிமன்ற தீர்ப்புரைகளின் அடிப்படையில் தொடர்புடைய இடத்தின் உரிமை ஆரம்ப கட்டம் முதல் நகராட்சி நிர்வாகத்திடம் இல்லை என்பதாலும், நகரளவை திட்டத்தின் போது தவறுதலாக கிராம கணக்குகளில் மேற்படி இடத்தினை நகராட்சி ராஜம்பாள் பூங்கா என பதிவு செய்யப்பட்டுள்ளதை திருத்தி தர்மமூர்த்தி ராவ் பகதூர்

கலவல குன்னன் செட்டி அறக்கட்டளையின் பெயரில் பட்டா மாற்றம் செய்து ப.மு.1052/2004/அ5, நாள் 24.06.2004–ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே தொடர்புடைய இடம் தர்மமூர்த்தி ராவ் பகதூர் கலவல குன்னன் செட்டி அறக்கட்டளைக்கு சொந்தமான இடம் என்பது மாவட்ட வருவாய் அலுவலர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி தெரியவருகிறது.'' என்று தெரிவித்துள்ளார்.

8) மேற்கண்ட மனை பிரிவில் உள்ள நகராட்சி பூங்கா இடத்தில் தவறுதலாக கட்டிட அனுமதி அளித்த நகரமைப்பு ஆய்வர் திரு. குமரவேல் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது தற்காலிக பணி நீக்கத்தில் உள்ளார் என்று ஆணையர் தெரிவித்துள்ளார். இதை ஏற்க இயலாது. கட்டிட அனுமதி ஆணையில் நகரமைப்பு ஆய்வாளர் ஒருவரை மட்டும் பொறுப்பாக்கி, நகரமைப்பு அலுவலர், ஆணையாளர் ஆகியோரை இதில் சம்பந்தப்படுத்தாததை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், பூங்கா இடத்தை 2011–ம் ஆண்டு போலியான ஆவணம் தயார் செய்து விற்பனை செய்ததை அப்போதைய அதிகாரிகள் யாரும் கண்டுகொள்ளவில்லை. நகர் ஊரமைப்பு துறையிடமிருந்து சுமார் 11 ஆண்டுகளாக பதில் எதிர்பார்க்கப்படுகிறது என்ற நிலையில் நிர்வாகம் உள்ளதை நகராட்சி நிர்வாகத்தின் மெத்தனத்தை காட்டுகிறது. எனவே, இதுப்போன்ற தவறுகளுக்கு காரணமான அனைத்து அதிகாரிகள் மீதும் துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைத்து திருவள்ளூர் நகராட்சி பகுதிகளுக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான 68 பூங்கா இடங்கள் மற்றும் இதர இடங்கள் எவையேனும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து, ஆக்கிரமிப்பு கண்டறியப்பட்டால் அவற்றை மீட்டு நகராட்சியிடம் ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மூன்று மாதத்திற்குள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

The Director of Municipal Administration is instructed to constitute a High Level Committee of officials to visit the Municipality and inspect the area under encroachment by way of illegal property transfer that has transpired over the years in the past. Valuable lands belonging to the local body of Thiruvallur Municipality have been alleged to have been sold by unscrupulous elements of the area. The Municipality authorities are also to be blamed for their share of indifference, violation and improper mindset in the whole issue. All revenue records like `A' Register, Adangal, Account of permanent changes kept in the Revenue Department should be scrutinized with reference to the survey numbers involved and steps to be initiated for recovery of lands from the illegal occupants of the Government land parcely within a time frame of 3 to 6 months in the maximum. A circular from the DMA may be sent to all

Municipalities and Corporations to be vigilant against unlawful encroachment on the lands vested with the Urban Local Bodies and eventual usurpation, by way of safeguarding the Government lands.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. K.G. பூபதி,
எண்.18/6, 5–வது தெரு,
பெரிய பாளையத்தம்மன் கோயில் தெரு,
மூலக்கொத்தளம், சென்னை – 600 021.

2. ஆணையாளர்,
திருவள்ளூர் நகராட்சி,
திருவள்ளூர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4. இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்

13/4/22

13/04/22

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை-600 032